*58*

# கர்த்தர் வரும்வரைக்கும்

## (13:8-14)

*நாம் ரோமர் 12:1ல் தொடங்கிய நடைமுறைபகுதியின் முடிவிற்கு வந்துள்ளோம். இந்தப் பாடத்திற்கான வேதவசனப்பகுதியின் மத்தியில், நாம் பின்வரும் வார்த்தைகளை வாசிக்கிறோம்: "நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது" (13:11), "இரட்சிப்பு" என்பது கர்த்தர் மறுபடியும் வந்து, அவரோடு இருக்கும்படி நம்மை எடுத்துக்கொள்ளும்போது நமக்குக் கிடைக்கவிருக்கும் நிறைவான இரட்சிப்பைக் குறிக்கிறது. வரவிருக்கும் இந்த நிகழ்ச்சியின் வெளிச்சத்தில், பவுல், "இப்படி நடக்கவேண்டும்" என்று கூறினார். இந்தச் சொற்றொடர் முன்னோக்கியும் பின்னோக்கியும் சுட்டிக்காண்பிக்கிறது. கர்த்தருடைய வருகையானது "நாம் [முதலில்] விசுவாசித்தபோதிருந்ததைக் காட்டிலும் ... அதிக சமீபமாக" உள்ளதால், இதைத் தொடர்ந்து வரும் வசனத்தில் கிறிஸ்தவர்கள் செய்யும்படிப் பவுல் கட்டளையிட்டவற்றை நாம் செய்வது அவசியமாக உள்ளது - மற்றும் நாம் அவரது முந்திய அறிவுறுத்துல்களையும் கவனித்துக் கடைப்பிடிக்க வேண்டும். "இப்படி நடக்கவேண்டும்" என்பது 12:1 முதல் நமது வேதபாட வசனப்பகுதியின் முடிவு வரையிலும் போதிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் குறிப்பிடக்கூடும், ஆனால் இந்தப் பாடமானது 13:8-14 உடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருக்கும்.*

*கர்த்தர் திரும்ப வருவார் என்ற உண்மையானது முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் மனங்களில் நிலையாக இருந்தது. அவர்கள் "மாரநாதா" (1 கொரிந்தியர் 16:22) என்று கதறினர்: "கர்த்தரே வாரும்"![1] அவர்கள், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று ஊக்கமாக ஜெபித்தனர் (வெளிப்படுத்தின விசேஷம் 22:20). அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தாலும், அவ்வப்போது அவ்வேலையை நிறுத்திவிட்டு, ஆகாயத்தைக் கண்ணோக்குவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இயேசு, "தாம் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல்" வரப்போவதாகக் கூறியிருந்தாரே (மாற்கு 13:26; காண்க மத்தேயு 24:30; 26:64; மாற்கு 14:62; 1 தெசலோனிக்கேயர் 4:17; வெளிப்படுத்தின விசேஷம் 1:7). இரண்டாம் வருகையின் நிச்சயதன்மை, தொடக்ககால கிறிஸ்தவர்களுக்கு வல்லமை நிறைந்த ஊக்குவிப்பாக இருந்தது. அது நாம் என்னவாக இருக்க வேண்டும் மற்றும் நாம் என்ன செய்யவேண்டும் என்பதற்கும் பலத்த ஊக்குவிப்பாக இருக்க வேண்டும்.*

*இந்தப் பாடத்திற்கு, "கர்த்தர் வரும்வரைக்கும்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. "கர்த்தர் வரும்வரைக்கும்" நாம் என்ன* செய்ய வேண்டும்? *ரோமர் 13:8-14 வரையிலுள்ள வசனப்பகுதியானது, அந்த மாபெரும் நாளுக்காகக் காத்திருக்கும் எல்லாக் கிறிஸ்தவர்களையும் பண்புப்படுத்த வேண்டிய இரு பண்பு*

இனங்களை முக்கியத்துவப்படுத்தி உரைக்கிறது.

## அன்புகூரும் நபராக இருங்கள் (13:8-10)

### செலுத்தப்படாத ஒரு கடன் (வசனம் 8அ, ஆ)

இந்தப் பகுதியின் முதல் வசனத்தில், சிந்தனையைத் தூண்டுகிற பின்வரும் கட்டளை உள்ளது: "ஒன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (வசனம் 8அ). சிலர் இவ்வார்த்தைகளை, ஒரு கிறிஸ்தவர் ஒருபொழுதும் எவ்வகையான கடனையும் வாங்கக்கூடாது என்று அர்த்தப்படுவதாக எடுத்துக்கொள்கின்றனர். அமெரிக்காவில் மாபெரும் மந்தநிலையின்போது (1930களில்) வாழ்ந்திருந்தவர்கள் பலர் பின்வரும் எண்ணப்போக்கைக் கொண்டிருந்தனர்: "உங்களால் ரொக்கம் கொடுத்து ஒரு பொருளை வாங்க இயலவில்லை என்றால், அது உங்களுக்குத் தேவையில்லை!" அந்தக் கண்ணோட்டம் குறித்து நான் பரிதாப்படுகிறேன், ஆனால் பவுல் அதைத்தான் தமது சிந்தையில் கொண்டிருப்பார் என்பது குறித்து நான் சந்தேகப்படுகிறேன்.[2]

"ஒன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என்பது, "ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்" என்று கூறிய 7ம் வசனத்தின்[3] பின்தொடர்ச்சியாக உள்ளது. "ஒன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என்பது, சந்தர்ப்பப்பொருளில், "நான் மேலே கூறிய ஏதொன்றையும் செய்யத் தவறாதிருங்கள்: உங்கள் வரிகளைச் செலுத்திவிடுங்கள், குடிமை அதிகாரிகளை மதித்து கனப்படுத்துங்கள்" என்று அர்த்தப்படுகிறது. "நீங்கள் செலுத்த வேண்டியவற்றைச் செலுத்தத் தவறாதிருங்கள்" என்பதே அடிப்படைக் கருத்தாக உள்ளது.[4] NIV வேதாகமத்தில் "Let no debt remain outstanding" என்றுள்ளது. LNT வேதாகமம் "Pay all your debts" என்று மாத்திரம் கூறுகிறது.

"உங்கள் எல்லாக் கடன்களையும் செலுத்துங்கள்" என்ற கொள்கை, அரசாங்கத்திற்கு நமது கடன் என்பதைவிட மிகப்பரந்த அளவில் நடைமுறைப்படுத்தப்பட முடியுமா? அனேகமாக அவ்வாறு செய்யப்படக்கூடும், ஏனெனில் பவுல் அந்தக் கட்டளையைத் தொடர்ந்து மிகவும் பொதுவான இயல்புள்ள போதனையை எடுத்துரைத்தார். தேவனுடைய பிள்ளைகள் தங்கள் கடன்களைச் செலுத்த வேண்டும் என்று அவ்வப்போது நினைவூட்டப்படுதல் நமக்கு அவசியமாக உள்ளது. சங்கீதம் 37:21, "துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்" என்று கூறுகிறது. தாங்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்தாத கிறிஸ்தவர்களால் கிறிஸ்துவின் நோக்கத்திற்கு மாபெரும் தீங்கு விளைவிக்கப்பட்டுள்ளது.[5]

நாம் இந்தப் பாடக்கருத்தில் இருக்கும்போது, ஒரு எச்சரிக்கையைக் கூட்டுவது எனக்கு அவசியமாக உள்ளது. நாம் ரோமர் 13:8ன் முதல் பாகத்தைப் பற்றிப் பேசியபோது, "நீங்கள் கடன்பட்டுள்ளதற்கான செலுத்துகைகளை நீங்கள் செலுத்தினால், நீங்கள் கடன் வாங்குதல் என்பது சரியான விஷயமே ஆகும்" என்பது சில கிறிஸ்தவர்கள் கேள்விப்படும் விஷயமாக உள்ளது. எனவே அவர்கள் தங்களால் இயன்ற வரையில் ஏதோ ஒருவழியில் கடனைத் திருப்பிச்

செலுத்திவிடும்போது அதிகமாய்க் கடன் வாங்குதல் என்பதில் தவறு ஒன்றும் இல்லை என்று நினைக்கின்றனர்.[6] இதன் விளைவாக, அவர்கள் தங்கள் கடன் களைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தங்கள் காலம் மற்றும் சக்தி யாவற் றையும் விரயம் செய்ய வேண்டியிருக்கிறது - இதனால் அவர்கள் கர்த்தருக்கென்று, தங்கள் குடும்பங்களுக்கென்று மற்றும் பிறவற்றிற்கென்று செலவழிக்க, சிறிதளவு காலம் மற்றும் சக்தியைக் கொண்டுள்ளனர் அல்லது ஒன்றும் கொண்டிருப்ப தில்லை. நிதிநிலைகள் பொறுத்தமட்டில் இவ்விதமான அணுகுமுறையானது, 8ம் வசனத்தின் முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ள ஒரு கொள்கை உட்பட, வேதாகம ரீதியான பல கொள்கைகளை மீறுகிறது: "ஒருவரிடத்திலொருவர் அன்புகூரு[தல்]." MSG வேதாகமம் இவ்வசனத்தின் இவ்வார்த்தைகளை: "Don't run up debts" என்று பொழிப்புரை செய்கிறது.

நிதிநிலை சம்பந்தப்பட்ட விஷயங்களில் பொறுப்புடன் இருத்தல் என்பது ஒரு முக்கியமான பாடக்கருத்தாக உள்ளது, ஆனால் பவுலின் சிந்தையில் இருந்த தலைப்பிற்கு நான் கடந்து செல்லுதல் அவசியமாக உள்ளது. அவர், "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்ற ஒன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என்று கூறினார் (வசனம் 8அ, ஆ). நாம் நமது கடன்களைச் செலுத்த வேண்டும், ஆனால் நம்மால் ஒருக்காலும் முழுவதுமாகத் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு கடன் உள்ளது. அது ஒருவரிடத்திலொருவர் அன்புகூருதல் என்ற கடன் ஆகும். D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர் பின்வரு மாறு கூறினார்,

> அன்பு என்பது மக்களின் மனங்களில், ஒரு மாண்புமிக்க கருத்து மற்றும் மகிழ்வளிக்கும் கூடுதல் விருப்பத்தேர்வு ஆகிய இரண்டிற்குமிடையில் ஏதோ ஒரு இடத்தில் இருப்பதாகக் காணப்படுகிறது. இருப்பினும், அப்போஸ்தலர், அன்பு என்பது வரிசெலுத்துதல் மற்றும் கடன்களைத் திருப்பச் செலுத்துதல் போன்றே ஒரு கடமையாக உள்ளது என்று வலியுறுத்துகிறார்.[7]

"ஒருவரிடத்திலொருவர்" என்ற சொற்றொடர், சககிறிஸ்தவர்களையே அடிக்கடி குறிக்கிறது (12:10 காண்க), மற்றும் பவுல் தமது சிந்தையில் இவைகளையே கொண்டிருக்கலாம். இருப்பினும், நாம் காணப்போகிறபடி, இதன் நடைமுறைப்பயன்பாடு, சபையின் சக உறுப்பினர்கள் என்பதைக் காட்டிலும் பரந்த அளவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரையும் அன்புகூர வேண்டிய கடன்பட்டிருக்கிறோம்.

நாம் ஏன் எல்லா மக்களையும் அன்புகூரக் "கடன்"பட்டிருக்கிறோம்? ஏனென் றால் கர்த்தர் நம்மீது அன்புகூர்ந்திருக்கிறார். யோவான், "பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று எழுதினார் (1 யோவான் 4:11). இந்த நிலையான கடன் குறித்துப் பல எழுத்தாளர்கள் ஓரிகன்[8] என்பவரை மேற்கோள் காண்பிக்கின்றனர்: "உங்களால் செலுத்தப்படாதிருக்கும் ஒரே கடன் என்பது அன்பு என்பதாக மாத்திரம் இருக்கட்டும் - இது எப்போதுமே முழுமை யாகச் செலுத்த முயற்சி செய்யப்படுவதாகவும், ஆனால் அவ்வாறு செலுத்துவதில் ஒருக்காலும் வெற்றிபெறாததாகவும் இருக்கும்."[9] ஒரு விளக்கவுரையை எழுதி யவர்கள் பின்வருமாறு எழுதினர்,

*கிறிஸ்து நம்மீது அபரிமிதமாகப் பொழிந்துள்ள அன்பிற்காக நாம் அவருக்கு நிரந்தரமாகக் கடன்பட்டிருக்கிறோம். மற்றவர்களை அன்புகூருவதன் மூலமாக என்பது மாத்திரமே, நாம் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கவாவது முடிகிற ஒரே வழியாக உள்ளது. ஏனென்றால் கிறிஸ்துவின் அன்பு என்பது எப்போதுமே நம்முடைய அன்பைக் காட்டிலும் எல்லையற்ற வகையில் மாபெரும் அளவுள்ளதாக இருக்கும், நாம் நமது அயலார்மீது அன்புகூர எப்போதுமே கடன்பட்டிருப்போம்.*[10]

***நியாயப்பிரமாணம் நிறைவேற்றம் அடைந்தது (வசனங்கள் 8இ-10)***

*பவுல் தமது கலந்துரையாடலைத் தொடர்ந்து, ஒருவரிடத்திலொருவர் அன்புகூருதல் முக்கியமாக இருப்பதற்கு ஒரு காரணத்தைக் கொடுத்தார்: "பிறனிடத்தில்*[11] *அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" (வசனம் 8இ). மூலவசனத்தில், "நியாயப்பிரமாணம்" என்பதற்கு முன்னால் திட்டவட்டமான சுட்டுச்சொல் எதுவும் இல்லை; ஆனால் 9ம் வசனத்தில் பவுல் நியாயப்பிரமாணத்திலிருந்து மேற்கோள் காண்பித்தார் (யாத்திராகமம் 20; உபாகமம் 5). இவ்விடத்தில் மோசேயின் நியாயப்பிரமாணமே முதன்மைக் குறிப்பாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக, மொழிபெயர்ப்பாளர்கள்* "the" *என்பதைச் சேர்த்தனர். பவுல், "பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" என்று கூறியபோது, அவர் முழுநியாயப் பிரமாணத்தையும் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை, ஆனால் சகமனித ருடன் ஒருவருக்குள்ள உறவுபற்றிக் குறிப்பிடும் பாகத்தை மாத்திரம் தமது சிந்தையில் கொண்டிருந்தார்.*

*பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பதை 9ம் வசனத்தில் விளக்கியுரைத்தார்: "எப்படியென்றால், 'விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக' என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், 'உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப்பிறனிடத் திலும் அன்புகூருவாயாக' என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கி யிருக்கிறது." இவ்வசனம், யாத்திராகமம் 20ல் இருந்தும், உபாகமம் 5ல் இருந்தும் பத்துக்கட்டளைகளில் நான்கை மேற்கோள் காண்பிப்பதைக் கொண்டு தொடங்கு கிறது. பத்துக்கட்டளைகள் அடிக்கடி இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன: முதல் நான்கு கட்டளைகள் தேவனுடன் நமது உறவைப் பற்றியவையாக உள்ளன, மற்றும் கடைசி ஆறு கட்டளைகள் மற்றவர்களுடன் நமது உறவைப் பற்றியவையாக உள்ளன. பவுலின் உதாரணங்கள் இரண்டாவது குழுவிலிருந்து எடுக்கப்பட்டிருந்தன:*

- *ஏழாவது கட்டளை: "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (வசனம் 9அ; காண்க யாத்திராகமம் 20:14). பத்துக் கட்டளைகளில், "விபசாரம்" என்பது அனேகமாக பாலுறவுரீதியான எல்லாப்பாவங்களையும் உள்ளடக்கியிருக்கலாம், ஆனால் இந்தக் கட்டளையானது ஒருவர் தமது திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருத்த லுக்கு விசேஷித்த குறிப்பை ஏற்படுத்திற்று. இந்தக் கட்டளை,*

இல்லத்தைப் பாதுகாத்தது.

- ஆறாவது கட்டளை: "கொலை செய்யாதிருப்பாயாக" (வசனம் 9ஆ; காண்க யாத்திராகமம் 20:13). இது ஒரு தனிநபர் மனப்பூர்வமாக இன்னொருவரின் உயிரை எடுத்தலைக் குறிக்கிறது. இந்தக் கட்டளை வாழ்வைப் பாதுகாத்தது.
- எட்டாவது கட்டளை: "களவு செய்யாதிருப்பாயாக" (வசனம் 9இ; காண்க யாத்திராகமம் 20:15). இது இன்னொருவருக்கு உரியவற்றை அவரது அனுமதியின்றி எடுத்தலைக் குறிக்கிறது. இந்தக் கட்டளை உடமைகளைப் பாதுகாத்தது.
- பத்தாவது கட்டளை: "இச்சியாதிருப்பாயாக" (வசனம் 9ஈ; காண்க யாத்திராகமம் 20:17). இன்னொருவருக்குரிய சில பொருட்கள்மீது பலத்த விருப்பம் கொண்டிருத்தல் இச்சித்தல் எனப்படுகிறது. இந்தக் கட்டளை இருதயத்தைப் பாதுகாத்தது.

பவுல் யாத்திராகமம் 20ம் அதிகாரத்தின் வரிசை முறையைப் பயன்படுத்தவில்லை என்பதைக் கவனியுங்கள். மேலும், அவர் ஐந்தாவது மற்றும் ஒன்பதாவது கட்டளைகளை விட்டுவிட்டார்: "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" மற்றும் "பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக."[12] (இவையும் மற்ற கட்டளைகளும், 9ம் வசனத்திலுள்ள "வேறே எந்தக் கற்பனையும்" என்ற பொதுவான சொற்றொடரில் உள்ளடங்குகின்றன.) இந்தக் கட்டளைகளை பவுல் தற்செயலாகக் கையாண்ட விதமானது, அவர் பத்துக்கட்டளைகளை மறுபடியும் கொண்டுவர முயற்சிசெய்யவில்லை,[13] ஆனால் அதற்கு மாறாக, தேவபக்தியுள்ள வாழ்வை வாழுதல் பற்றி உணர்வுள்ள பெரும்பான்மையான தனிநபர்களினால் அங்கீகரிக்கப்படக்கூடிய ஒழுக்கரீதியான கடமைகளையே பட்டியலிட்டார்.

இப்படிப்பட்ட கட்டளைகள் யாவும் "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப்பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" என்று கூறினார் (ரோமர் 13:9உ). இயேசுவினிடத்தில், "போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று" கேட்கப்பட்டபோது (மத்தேயு 22:36) அவர் பின்வருமாறு பதில் அளித்தார்,

> "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" [உபாகமம் 6:5 காண்க]; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும்அன்பு கூருவாயாக [லேவியராகமம் 19:18 காண்க]" என்பதே (மத்தேயு 22:37-39).

மற்றவர்களுடன் நமது உறவு என்பதே இவ்வசனப்பகுதியில் பவுலின் அக்கறைக்குரிய விஷயமாக இருந்தபடியால், அவர் இயேசு "இரண்டாவது [மாபெரும் கட்டளை]" என்று அழைத்த கட்டளை மீது கவனத்தை ஒருமுகப்படுத்தினார்: "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப்பிறனிடத்திலும் அன்புகூருவா

யாக.'' "பிறன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*plesion* என்ற) வார்த்தை யானது, "அருகில்" என்பதற்கான (*pelas* என்ற) வார்த்தையிலிருந்து தரவழைக்கப் பட்டுள்ளது.[14] "Nearby-er" என்பது "neighbor," "பிறன்" என்பதன் நேரடித் தரவழைப்பாக இருக்கலாம். இருப்பினும், நல்ல சமாரியன் உவமையில், இயேசு "பிறன்" என்பது அருகில் வாழும் நபருக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்துவது அல்ல என்பதைத் தெளிவாக்கினார். அது, நாம் தொடர்புகொள்ளுகிற உண்மை யான தேவை உள்ளவராக இருக்கும் ஒவ்வொருவரையும் உள்ளடக்குகிறது (காண்க லூக்கா 10:25-37).

அனேகமாக நான் "உன்னிடத்தில்" என்ற வார்த்தை, நீங்கள் உங்களையே அன்புகூர வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டுள்ளதாக அர்த்தப்படுவ தில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். மாறாக, அவைகள் சட்டப்படி மக்கள் தங்களைத் தாங்களே "அன்புகூருகிறவர்களாக" [*agapao*] *இருக்கின்றனர்* என்பதை ஒப்புக்கொள்கின்றன. இது பெரும்பான்மையான தனிநபர்கள், தங்களின் அடிப்படைத் தேவைகள் - உணவு, உடை, மற்றும் இருப்பிடம் போன்ற தேவைகள் - சந்திக்கப்படுவதை நிச்சயப்படுத்திக்கொள்ளத் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுகின்றனர் என்பதாகும். அது போலவே, நாம் மற்றவர்கள் மீது அக்கறையுள்ளவர்களாக, அவர்களின் பௌதீக, உணர்வுரீதியான, மற்றும் ஆவிக்குரிய தேவைகளை அவர்கள் சந்திக்கும் படி பிரயாசப்படுவதன்மூலம், மற்றவர்கள்மீது அன்புகூர [*agapao*] வேண்டியவர் களாக இருக்கிறோம்.[15]

மற்றவர்களை அன்புகூருதல் பற்றிய கலந்துரையாடல் தொடருகையில், நாம் "அன்பு என்பது பிறருக்கு நன்மையைச் செய்கிறது" என்று வாசிக்கும்படி எதிர்பார்க்கலாம். அதற்குப்பதிலாகப் பவுல், "அன்பானது பிறனுக்குப் பொல் லாங்கு[16] செய்யாது'' என்று கூறினார் (ரோமர் 13:10அ). நேர்மறைக்குப் பதிலாக அவர் எதிர்மறையைப் பயன்படுத்தியது ஏன்? அனேகமாக, மேலே பட்டியலிடப்பட்ட ஐந்து கட்டளைகளும் வடிவத்தில் எதிர்மறையாக இருந்ததால் என்பதே காரணமாயிருக்கலாம்: "விபசாரம் செய்யா*திருப்பா யாக*, கொலை செய்யா*திருப்பாயாக*, களவு செய்யா*திருப்பாயாக*, பொய்ச் சாட்சி சொல்லா*திருப்பாயாக*, இச்சியா*திருப்பாயாக*" (என்னால் வலியுறுத்தப்படு கிறது). நாம் அன்புகூர வேண்டியபிரகாரம் அன்புகூர்ந்தால், நாம் இந்தப் பிரமா ணங்கள் யாவற்றையும் - மற்றும் சக மனிதர் பற்றிய வேறு எந்தப் பிரமாணத் தையும் - கைக்கொண்டிருப்போம். இந்தக் காரணத்தினால்தான், பவுல், "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது'' (வசனம் 10ஆ) என்று கூறினார்.

10ம் வசனத்தில் பவுல் *கூறாதது* என்ன என்பதைப்பற்றி நான் தெளிவாக்க என்னை அனுமதியுங்கள். அவர், "அன்பு என்பது நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாயிருக்கிறது" என்பதால் நமக்குத் தேவனுடைய பிரமாணங்கள் இனியும் தேவையில்லை என்று அவர் *கூறவில்லை*. சில வருடங்களுக்கு முன்பு, பின்வரும் வாசகத்துடனான ஒரு இயக்கம் இருந்தது: "அன்பு ஒன்றே பிரமாணம்.'' இந்த இயக்கத்தில் இருந்தவர்கள், உபதேசம் மற்றும் ஒழுக்கம் ஆகியவை பற்றிய வேதாகமத்தின் எல்லாக் கட்டளைகளில் இருந்தும் தாங்கள் விடுதலையாகி இருந்ததாக அறிவித்துக்கொண்டனர். தேவன் கொடுத்த ஒவ்வொரு பிரமாணத்தையும் எடுத்துப்போடுதல் என்பது [இவ்விடத்தில்]

*பவுலின் நோக்கமாக இருக்கவில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன். அப்படிப்பட்ட முடிவானது, பவுல் ரோமர் 12-16ல் கூறியவற்றில் அதிகமான வற்றை ஒன்றுமற்றதாக்கி விடும். ஜான் R. W. ஸ்டாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *அன்பு என்பது மெய்மை ஒழுக்கத் தர அளவையின்றி, தன்சொந்தத்தில் மேலாண்மை செய்துகொள்ள இயலாது. அதனால்தான் பவுல், "அன்பு என்பது நியாயப்பிரமாணத்தின் முடிவாக உள்ளது" என்று எழுதாமல், "அன்பு என்பது நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாக உள்ளது" என்று எழுதினார். ஏனென்றால் அன்பும் நியாயப்பிரமாணமும் ஒன்றுக்கொன்று தேவைப்படும் நிலையில் உள்ளன. அன்பு தனது வழிநடத்துதலுக்கு நியாயப்பிரமாணம் தேவைப்படுகிறது, அதேவேளையில் நியாயப்பிரமா ணம் தனது ஏவுதலுக்கு அன்பு தேவைப்படும் நிலையில் உள்ளது.*[17]

*நமக்கு (புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறதான) தேவனுடைய நியாயப்பிர மாணம் இனியும் தேவைப்படுவதில்லை என்று பவுல் கூறிக்கொண்டிருந்தாரா? இல்லை என்றால், பின்பு அவர் என்னதான் கூறிக்கொண்டிருந்தார்? ஏற்கனவே கருத்துத் தெரிவிக்கப்பட்டபடி, அன்பு நம்மை 9ம் வசனத்தில் பட்டியலிடப் பட்டுள்ள கட்டளைகளைக் கைக்கொள்ள (நிறைவேற்ற) தூண்டுகிறது என்று அவர் கூறிக்கொண்டிருந்தார். தமது மனைவியில் அன்புகூரும் மனிதர் அவளுக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார். ஒரு தனிநபர் தமது சகோதரன் மீது அன்புகூர்ந் தால், அவர் அந்த சகோதரனுக்குத் தீங்கு எதுவும் செய்யமாட்டார் - மற்றும் நிச்சயமாக அவரைக் கொலைசெய்ய மாட்டார். மற்றவர்கள்மீது அன்புகூருகிறவர் அவர்களிடத்தில் களவுசெய்ய மாட்டார். மற்ற மக்களுக்கு நல்ல விஷயங்கள் நடக்கும்போது அவர் சந்தோஷப்படுவார் மற்றும் அவர்கள் கொண்டுள்ளவற்றின் மீது அவர் இச்சைகொள்ள மாட்டார்.*

*அன்புகூரும் ஒரு நபர் தேவனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதைப் போதிப்பதற்குத் தேவன் பிரமாணங்களை மக்களுக்குக் கொடுத்தார் என்று கருத்துத் தெரிவிக்கவும் என்னை அனுமதியுங்கள். ஆகவே, ஒரு நபர் அன்புகூரக் கற்றுக்கொள்கிறபோது, அவர் தேவனுடைய பிரமா ணத்தின் வலிவார்ந்த நோக்கத்தை நிறைவேற்றுகிறார்.*

*கர்த்தர் வரும்வரைக்கும், நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் அன்புகூரும் தனிநபர்களாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

## தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழுங்கள் (13:11-14)

*அது நம்மை இந்தப்பாடத்தின் அறிமுகத்தில் மேற்கோள் காட்டப்பட்ட வசனத்தில் கொண்டுவருகிறது: "நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்க வேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது" (வசனம் 11). ஏற்கனவே குறிப்பிட்டபடி, "இப்படி நடக்கவேண்டும்" என்பது மேலே கூறப்பட்டபடி, அன்புகூருதலுக்கான அறைகூவலைக் குறிப்பிடமுடியும், அல்லது 12ம் அதிகாரத்தின் தொடக்கத்திலிருந்து பவுல் கூறிய ஒவ்வொன்றையும்*

குறிப்பிடமுடியும். இது, தேவபக்தியுள்ள வாழ்க்கையை நடத்துதல் குறித்து, அப்போஸ்தலர் என்ன கூறவிருந்தார் என்பதையும் குறிக்கிறது. டேல் ஹார்ட் மேன் என்பவர் - ரோமருக்கு எழுதிய நிருபத்திலிருந்து யூதா எழுதின நிருபம் வரைக்கும் - எல்லா நிருபங்களும் தேவபக்தியுள்ள வாழ்வுபற்றி முதன்மையாகக் கூறுகின்றன என்று குறிப்பிட்டார்.[18] தொடரும் வசனங்கள் இதற்கு வல்லமை நிறைந்த செயல்விளக்கமாக உள்ளது.

**"இது என்ன வேளையாக உள்ளது?"**

பவுல், ஒரு குழந்தையை எழுப்பி அதற்கு அன்றைய நாளுக்கான அறிவுறுத்துதல்களைத் தரும் ஒரு பெற்றோரின் ஒப்புவமையைப் பயன்படுத்தினார். இந்தப் பகுதியானது பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொடங்குகிறது: "நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை[19] அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்"[20] (வசனம் 11அ). விளக்கவுரையாளர்கள், ஒரு குறிப்பிட்ட "வேளை" அல்லது "மணியை" அடையாளப்படுத்த முயற்சி செய்கின்றனர். நீரோ கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது தொடங்கி எருசலேமின் அழிவு வரையிலும் யூகங்கள் எல்லை கொண்டுள்ளன. அனேகமாக இந்தச் சொற்றொடராக்கம், இவ்வார்த்தைகள் பவுலின் நாட்களில் போன்றே இன்றைய நாட்களிலும் ஏற்புடையவைகளாக இருப்பதற்காக வேண்டுமென்றே தெளிவற்றதாக உள்ளது எனலாம். ஆவிக்குரிய வகையில் நித்திரையாயிருத்தல் என்பது பற்றி, நாம் மிகவும் விரைவாக எழுந்துகொள்ள முடியாது அல்லது மிகவும் தாமதமாக எழுந்துகொள்ளத் துணியக்கூடாது. "எழுந்திருக்கத்தக்க வேளை" என்பது எப்போதுமே *இப்பொழுது* என்பதாகவே உள்ளது. தூங்குகிற ஒரு மகனைத் தந்தை தட்டியெழுப்புகையில், "நேரமாயிற்று, எழுந்திரு!" என்று கூறுவதை நான் சித்திரித்துக் கொள்கிறேன்.

11ம் வசனத்தில், "நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, ... நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது" என்று தொடர்ந்து கூறினார். அறிமுகக் குறிப்பில் குறிப்பிட்டபடி, இங்கு "இரட்சிப்பு" என்பது பரலோகத்தில் நம்முடைய நிறைவான இரட்சிப்பைக் குறிக்கிறது (காண்க 1 பேதுரு 1:5). கர்த்தர் மறுபடியும் வரும்போது நாம் இந்த இரட்சிப்பைப் பெறுவோம் என்பதால் (காண்க எபிரெயர் 9:28), இது "நாம் விசுவாசிகளானபோது ... சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது ... நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது." "நாம் விசுவாசிகளானபோது" என்பது நாம் கிறிஸ்தவர்களான வேளையைக் குறிக்கிறது. நாம் தொடர்ந்து விசுவாசிப்பதால், சில மொழிபெயர்ப்புகள் "முதலில்" என்ற வார்த்தையை இவ்விடத்தில் சேர்த்துள்ளன: "நாம் *முதலில்* விசுவாசிகளானபோது" (NIV; RSV; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அவர்களின் நினைவுகூரும் தன்மைக்கும் (அவர்கள் முதலில் விசுவாசிகளான வேளையை மறுபடி நினைவுக்குக் கொண்டுவந்தார்), அவர்களின் நம்பிக்கைக்கும் (அவர்களுக்கு இனிகிடைக்கவிருந்த இரட்சிப்பை முன்னெதிர் நோக்கினார்) பவுல் வேண்டுகோள் விடுத்தார். R. C. பெல் என்பவர் இதை, பவுலின் "தள்ளும் மற்றும் இழுக்கும்" தூண்டுதல் என்று அழைத்தார்.[21] பவுலின் வார்த்தைகளில், கிறிஸ்து எப்போது வேண்டுமானாலும் வருவார் என்பதால் அவரது[பவுலின்] வாசகர்கள் எழுந்திருக்க வேண்டியதன் அவசியம் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் ஆவிக்குரிய வகையில்

உறங்கிக் கொண்டிருந்தால், அவர்கள் அவரது மறுவருகைக்குத் தயாராக இருக்க மாட்டார்கள்.

கர்த்தர் எப்போது மறுபடியும் *வருவார்*? இயேசு, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்'' என்று கூறினார் (மாற்கு 13:32). மிகச்சரியான வேளையைப் பவுல் அறிந்திருக்கவில்லை,[22] ஆனால் அவர் பின்வருவதை அறிந்திருந்தார்: அவரது வாசகர்கள் ஞானஸ்நானம் பெற்றபொழுது இருந்ததைக் காட்டிலும் வேளையானது அதிக சமீபமாயிருந்தது. அப்போஸ்தலரின் நாட்களில் அது உண்மையாக இருந்தது என்றால், நமது நாட்களில் அது இன்னும் எவ்வளவு அதிக உண்மையாக இருக்க வேண்டும்! இரண்டாம் வருகையானது, பவுல் ரோமருக்கு நிருபம் எழுதிய நாட்களில் இருந்ததைக் காட்டிலும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் அதிக நெருக்கமானதாக உள்ளது!

''எழுந்திருப்பதற்கான'' அவசியத்தின்மீதான தமது வலியுறுத்தத்தைப் பவுல் 12ம் வசனத்தில் தொடர்ந்தார்: "இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று'' (ரோமர் 13:12அ). விளக்கவுரையாளர்கள் "இரவு'' மற்றும் "பகல்'' என்பவற்றை அடையாளப்படுத்துவதில் மாபெரும் படைப்பாக்கத் திறனைச் செயல்விளக்கப்படுத்துகின்றனர்,[23] ஆனால் அனேகமாகப் பவுல் தமது ஒப்புவமையைத் தொடருதல் என்பதை மாத்திரம் செய்திருக்கலாம். நமது வீடுகளில், "இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று'' என்னும்போது, அது விழித்து வேலைசெய்ய வேண்டிய வேளையாக உள்ளது என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது! எனது சிந்தனையானது, தனது மகனுடைய படுக்கையில் அவனை உலுக்கி, ''எழுந்திரு, நேரமாயிற்று!'' என்று கூறும் தந்தையிடத்தில் திரும்புகிறது. போர்வையை இழுத்துத் தலைமீது போர்த்துக்கொண்டு, "அப்பா, இன்னும் ஐந்து நிமிடங்கள் மாத்திரம் எனக்குக் கொடுங்கள்'' என்று முணுமுணுக்கும் மகனை என்னால் [கற்பனையில்] காணமுடிகிறது. (ஆம், நான் இந்தக் காட்சியை அனுபவித்திருக்கிறேன்.) தந்தையார், "இன்னும் ஒரு வினாடிகூடக் கொடுக்க முடியாது! *இப்போதே* எழுந்திரு, நேரமாயிற்று'' என்று பதில் அளிக்கிறார். அதுவே பவுல் கூறுவதன் சாராம்சமாக உள்ளது.

### "நாம் என்ன செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்?" (வசனங்கள் 12ஆ-14)

நாம் விழித்தெழுந்து நமது கண்களிலிருந்து தூக்கத்தைத் துடைத்து அகற்றியவுடன், பின்பு நாம் என்ன செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்? அடுத்ததாக, நாம் உடை அணிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் கூறினார்: "ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்'' (வசனம் 12ஆ). ஒருவர் தமது உடைகளைக் களைந்து போடுதல் மற்றும் உடைகளை அணிந்துகொள்ளுதல் என்ற பழக்கங்களின்படியான, ''களைந்து போடுதல்'' மற்றும் ''தரித்துக்கொள்ளுதல்'' என்ற உருவகங்களைப் பவுல் அடிக்கடி பயன்படுத்தினார் (காண்க எபேசியர் 4:22-24; கொலோசெயர் 3:8-10). ரோமர் 13:12ல் நமக்குச் செயல்விளைவில், நமது தூக்கத்தின் உடைகளைக் களைந்துபோட்டு பகலின் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய உடைகளை அணிந்துகொள்ளும்படி அறைகூவல் விடப்படு

கிறது.[24]

"அந்தகாரத்தின் கிரியைகள்" என்ற சொற்றொடர் பாவம் நிறைந்த செயல்பாடுகளைக் குறிக்கிறது. அவைகள் பெரும்பாலும் இரவில் அல்லது இரவின் மூடுகையில் செய்யப்படுவதால், "அந்தகாரத்தின் கிரியைகள்" என்று அழைக்கப் படுகின்றன (காண்க யோவான் 3:19; 1 தெசலோனிக்கேயர் 5:7). பவுல், *கிறிஸ்தவர்களிடம்* பேசிக்கொண்டிருந்தார் என்பதை மறந்துவிடாதீர்கள். கிறிஸ்தவர்கள் எப்போதாவது ஒழுக்கவீனத்தின் குற்றத்தில் இருக்கின்றனரா? ஆம், அவர்கள் இருக்கின்றனர் - மற்றும் அவர்கள் அவ்வாறு இருக்கும்போது பின்வருமாறு அறைகூவல் விடுத்தல் அவசியமாக உள்ளது: "அந்த தேவபக்தியற்ற தன்மையை விட்டுவிடுங்கள்! அதை உதறியெறியுங்கள்!"; "Fling away the things that men do in the dark" (ரோமர் 13:12; Phillips).

இரவு வேளையில் அணியும் உடைகளைக் களைந்துபோட்டால் மாத்திரம் போதாது, நாம் பகல் வேளைக்குரிய ஆடைகளை அணிவதும் அவசியமாக உள்ளது. பவுல், "ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்" என்று கூறினார். "ஆயுதங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*hoplon* என்பதிலிருந்து வந்துள்ள) வார்த்தையானது தனது பன்மை வடிவத்தில் "யுத்தத்திற்கான ஆயுதங்களைக்" குறிக்கிறது.[25] இவ்வார்த்தை ரோமர் 6:13ல் "அநீதியின் ஆயுதங்கள்" மற்றும் "நீதியின் ஆயுதங்கள்" என்ற சொற்றொடர்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையாக உள்ளது.[26] நாம் ஓய்வுநேர உடையணிந்து உல்லாசமாகத் திரிவதற்கல்ல, ஆனால் அதற்கு மாறாக "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு"வதற்கு ஆயத்தமாகிறோம் (1 தீமோத்தேயு 6:12அ).

நாம் விழித்தெழுந்து உடையணிந்ததும், என்ன செய்ய வேண்டும்? நாம் நமது சிருஷ்டிகரும் இரட்சகருமானவரை மகிமைப்படுத்தும் வகையிலான வாழ்வை வாழ வேண்டும். "பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம்" (ரோமர் 13:13ஆ). "பகலிலே நடக்கிறவர்கள்போல" என்பது, நாம் நமது வாழ்வை வெளிப்படையாக, வெட்கக்கேடு இல்லாது, எல்லோராலும் சோதித்துப் பார்க்க அனுமதிக்குமாறு வாழவேண்டும் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது.

"சீராய் நடத்தல்" என்பது பற்றிப் பவுல், நாம் தவிர்க்க வேண்டிய "அந்தகாரத்தின் கிரியைகள்" என்பவற்றிற்கு ஆறு உதாரணங்களைக் கொடுத்தார்: "களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும்" (வசனம் 13அ). இது "அந்தகாரத்தின் கிரியைகள்" பற்றி முழுப்பட்டியலாக இருப்பதில்லை; இது ஒரு பிரதிநிதித்துவப் பட்டியலாக மாத்திரம் உள்ளது. கலாத்தியர் 5:19-21ல் பவுல் செய்தது போன்று, இப்படிப்பட்ட பட்டியல்களுடன், "முதலானவைகள்" என்பதை நாம் சேர்த்துக்கொள்ளக் கூடும். நமது வேத வசனப்பகுதியிலுள்ள ஆறு உதாரணங்கள் மூன்று இணைகளாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

"களியாட்டும் வெறியும்" என்பது முதல் இணையாக உள்ளது. "களியாட்டு" என்பது, 13ம் வசனத்தில், "*அதிகமான கொண்டாட்டம் ..., களியாட்டின் விரோதம்*" என்பதைக் குறிக்கும் *komos* என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது.[27] NIV வேதாகமத்தில் "orgies" என்றுள்ளது. *Komos* என்பது "ஒரு மனிதன் தன் சுயத்தைத் தாழ்த்துதல் மற்றும் மற்றவர்களுக்குத் தொல்லைகொடுத்தல்" என்பதை விவரிக்

கிறது.[28] இது பெரும்பாலும், "மதுபானம் பண்ணுதலின் விளைவாக" இருந்தது,[29] எனவே இது "மதுபானம் பண்ணுதல்" என்பதன் பாவத்துடன் பிணைக்கப் பட்டுள்ளது (*methe*; "மதுவினால் மதிமயங்குதல்").

"வேசித்தனமும் காமவிகாரமும்" என்பது அடுத்ததாக உள்ளது. "வேசித் தனம்" என்பது பாலுறவு தொடர்பான பாவத்திற்கான (*porneia* என்ற) வழக்க மான வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருப்பதில்லை, ஆனால் அது "படுக்கை" என்பதற்கான *koite* என்ற வார்த்தையின் பன்மை வடிவத்தி லிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Koite* என்பது "பாலியல் உறவுக்கு ... நல்வார்த்தை" என்ற வகையில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும்.[30] "படுக்கை" என்ற வார்த்தை, சிலவேளைகளில், "அவர்கள் ஒன்றாகப் படுக்கச் சென்றனர்" என்ற சொல்விளக்கத்திற்கு இன்றைய நாட்களிலும் பயன்படுத்தப்படுகிறது. பன்மை வார்த்தையான *koite* ("படுக்கைகள்") என்பது இவ்விடத்தில் சட்டவிரோத மான பாலுறவுச் செயல்பாட்டைக் குறிக்கிறது.

"காமவிகாரம்" என்பது "வேசித்தனம்" என்பதோடு இணைக்கப்பட்டுள்ளது, இது *aselgeia* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த கிரேக்க வார்த்தை "அதிகமான, வேசித்தனம், கட்டுப்பாடு இல்லாமை, நயப்பாங்கு இல்லாமை, வெறித்தனம்" ... வெட்கக்கேடான நடத்தை என்பதே மேலோங்கி யுள்ள கருத்தாகும்" என்பதைக் குறிக்கிறது.[31] வில்லியம் பார்க்ளே என்பவர், "*Aselgeia* என்பது கிரேக்க மொழியிலுள்ள ஆபாசமான வார்த்தைகளில் ஒன்றாகும். இது ஒழுக்கவீனத்தைக் குறிப்பதோடு நின்றுவிடுவதில்லை; இது வெட்கத்தை இழந்துபோன மனிதனை விவரிக்கிறது" என்று எழுதினார்.[32] "இது பாலுறவின் தகாதநிலை வகை மற்றும் நவீன சமூகம் கைவிட்டுவிட்ட பண்புகள் மற்றும் அடிக்கடி ஏறக்குறைய வித்தியாசப்படுத்தும் அடையாளமாக ஆர்ப்பரித்தல் ஆகிய வற்றைக் குறிக்கிறது" என்று ஜான் மெக் ஆர்தர் என்பவர் எழுதினார்.[33]

முதல் இரண்டு இணைகள் உங்களைக் குற்றப்படுத்தவில்லை என்றால், மூன்றாவது இணை உங்களைக் குற்றப்படுத்தலாம்: "வாக்குவாதமும் பொறா மையும்." "வாக்குவாதம்" என்பது, "சண்டை சச்சரவு" என்பதைக் குறிக்கிற *eris* என்பதிலிருந்து வந்துள்ளது, இது "விரோதம்" என்பதன் சொல்விளக்கமாக உள்ளது.[34] *Eris* என்பது "தான் தர வேண்டிய விலை அல்லது மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், தனது சொந்த வழியைக் கொண்டிருக்கப் பகைமை உணர்வுடன் போராடும் ஆவியைப் பிரதிபலிக்கிறது."[35] அது, "தான் கொண்டுள்ளவற்றில் திருப்தியடையாமல் யாரேனும் ஒருவருக்குத் தரப்பட்டுள்ள ஆசீர்வாதத்தைப் பொறாமையான கண்களுடன் காணுகிற மற்றும் அதைத் தன்னுள் மறுக்கிற ஆவி" என்று விவரிக்கப்படுகிற பொறாமையுடன் (*zelos*[36]) பிணைக்கப்பட்டுள்ளது.[37]

சிலர் - களியாட்டு, வெறி, வேசித்தனம், மற்றும் காமவிகாரம் என்ற - முதல் நான்கு பாவங்களை "மோசமான பாவங்கள்" என்று கருதுகின்றனர், ஆனால் வாக்குவாதம் மற்றும் பொறாமை ஆகியவற்றை "அவ்வளவு மோசமா யிராத" வகையில் இடுகின்றனர். பவுல் கடைசி இரண்டை மற்றவற்றுடன் பட்டியலிட்டார் என்பது, தேவன் "பெரிய" அல்லது "சிறிய" என்று பாவங்களை வகைப்படுத்துவதில்லை என்பதைச் சுட்டிகாண்பிக்கிறது. வாக்குவாதமும், பொறாமையும், முதல் நான்கு பாவங்களில் விளக்கப்பட்டுள்ள, "பாவம் நிறைந்த [மற்றும் சுயநலமான] மனப்போக்கை ... அதிக நாகரீகமாக வெளிப்படுத்துதல்

களாக"[38] மாத்திரமே உள்ளன. இங்கு பட்டியலிடப்பட்டுள்ள மற்ற பாவங்களை நம்மை விட்டுத் துரத்துவதைக் காட்டிலும் இவற்றைத் துரத்துதல் அதிக கடினமா யிருப்பதாக நம்மில் சிலர் கண்டிருக்கும் காரணத்தினால், பவுல் இவற்றைக் கடைசியில் பட்டியலிட்டிருக்கலாம்.

"அந்தகாரத்தின் கிரியைகளை" நாம் எவ்வாறு தவிர்க்க முடியும்? பவுல் இரு கட்டளைகளைக் கொடுத்தார். அவற்றில் ஒன்று நேர்மறையாகவும் இன்னொன்று எதிர்மறையாகவும் உள்ளன. முதலில், நாம் நேர்மறையானதைக் காண்போம்: 12ம் வசனத்தில் அப்போஸ்தலர், தமது வாசகர்களை "ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளும்படி" கூறினார்; இப்போது, வசனம் 14ஆ வில் அவர், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும்படிக்கு" அவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார். NEB வேதாகமம் இவ்விரு வசனங்களிலுள்ள அறை கூவலுக்கு இடையிலிருக்கும் உறவைச் சுட்டிக்காண்பிக்கிறது: "இயேசுகிறிஸ்துவே நீங்கள் அணிந்துகொள்ளும் ஆயுதமாக இருப்பாராக."

கிறிஸ்துவைத் "தரித்துக்கொள்ளுதல்" [இது *enduo* என்பதிலிருந்து வந்துள்ளது] என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? 6ம் அதிகாரத்தில் நமக்கு, நாம் ஞானஸ்நானம் பெற்றபோது, நாம் "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம்" பெற்றோம் மற்றும் "அவருடன் இணைக்கப்பட்டுள்ளோம்" (வசனங்கள் 3, 5) என்று கூறப்பட்டது. முந்திய நிருபம் ஒன்றில் பவுல், "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் [இது *enduo* என்பதிலிருந்து வந்துள்ளது] கொண்டீர்களே" என்று எழுதினார் (கலாத்தியர் 3:27). நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானபோது கிறிஸ்துவை "தரித்துக்கொண்டோம்" - ஆனால் "கிறிஸ்துவை" தங்களுக்கு உடையாக "அணிந்துள்ள" மக்கள்போல் *வாழ* நாம் கற்றுக்கொண்டாக வேண்டும். நாம் நம்மை, இரக்கம், நற்தன்மை, மற்றும் கர்த்தருடைய பெலம் ஆகியவற்றைக் கொண்டு தரிப்பிக்க/அணிவிக்க வேண்டும்.[39] நாம் இதைச் செய்தால், 13ம் வசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பாவங்களின் வகைகளைத் தவிர்ப்பவர்களாய் இருப்போம்.

பவுலின் எதிர்மறையான கட்டளை தொடருகிறது. இது நடைமுறையான ஒன்றாக உள்ளது: "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து" (ரோமர் 13:14அ). "இடமாக" என்பது "முன்சிந்தனை" என்று அர்த்தப்படுகிற *pronoia* (*pro* ["முன்னதாக"] கூட்டல் *noeo* ["நினைக்க"]) என்பதிலிருந்து வருகிறது. *Pronoia* என்பது "[*poieo*, 'ஏற்படுத்த'] என்பதுடன் பயன்படுத்தப்படும்போது, சில வற்றிற்கான இடத்தை ஏற்படுத்துதல் என்பதே சிந்தனையாக உள்ளது."[40]

மாம்சத்திற்கு இடமளித்துப் பேணுதல் என்பது எதை அர்த்தப்படும்? சிலவற்றிற்காக - ஏதோ ஒன்றிற்காக ஆயத்தப்படுத்துதல் பற்றி நினைத்துப் பாருங்கள். அது ஒருவேளை வரவிருக்கும் சிறுபயண மாக இருக்கலாம் ... அல்லது நெருங்கிக் கொண்டிருக்கும் குளிர்கால மாக இருக்கலாம் ... அல்லது பொதுவாக எதிர்காலமாக இருக்கலாம்.[41] நீங்கள் எவ்வாறு இவை ஒவ்வொன்றிற்கும் இடமளிக்கிறீர்கள்? ஒரு எளிய உதாரணத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள என்னை அனுமதி யுங்கள். நீங்கள் காட்டினூடே நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள், மற்றும் ஒரு இடத்தில் தீமூட்ட முடிவு செய்கிறீர்கள். அதற்கு நீங்கள் எவ்வாறு "இடம் அளித்துப் பேணுவீர்கள்"? முதலாவது, உங்களுக்கு ஒரு

கட்டு விறகும் எரியக்கூடிய பிற பொருட்களும் தேவைப்படும், எனவே அதை நீங்கள் சேகரிக்கிறீர்கள். பின்பு, நெருப்பைப் பற்ற வைக்க உங்களுக்குச் சிலவிஷயங்கள் தேவைப்படும்; ஒருவேளை உங்கள் பாக்கெட்டில் நீங்கள் நெருப்புப் பெட்டி வைத்திருக்கலாம். விறகு மற்றும் சுவாலை ஆகியவற்றைக் கொண்டு நீங்கள் உங்கள் நெருப்புக்குத் தேவையானவற்றிற்கு "இடம் அளித்துப் பேணுகிறீர்கள்." இருப்பினும், நீங்கள் விறகையும் சுவாலை யையும் நீக்கிப்போட்டால், நெருப்பு இருக்க முடியாது. செயல்விளைவில் பவுல், "உங்கள் இச்சைகள் உங்களைப் பற்றியெரியச் செய்யாதபடி நீங்கியிருக்க, உங்கள் நெருப்புப் பெட்டிகளைத் தூக்கி எறிந்துவிட்டு விறகு சேகரிப்பதை நிறுத்தி விடுங்கள்!" என்றே கூறினார்.

முன்பு மதுபானம் பண்ணியிருந்து இப்போது மனம்மாறியுள்ள ஒரு நபர், தனது இல்லத்தில் மதுபானத்தை வைத்துக்கொண்டு தமது முன்னாள் குடிகார நண்பர்களுடன் தொடர்பைத் தொடர்ந்து கொண்டிருப்பார் என்றால், அவர் மது பானத்தினால் மதிமயங்குவதற்கு இடம் அளித்துப் பேணுகிறார் என்றாகிறது. சனிக்கிழமை இரவில் நீங்கள், அடுத்தநாள் காலை ஆராதனை ஊழியத் திற்குச் செல்லும்படி ஓய்வெடுத்திருக்கும் சிந்தையின்றி இரவில் நெடுநேரம் விழித் திருந்தால், சபைகூடுகையைத் தவறவிட இடமளித்துப் பேணுகிறீர்கள் என்றா கிறது.

உங்களையே நீங்கள், "எனது ஆவிக்குரிய பலவீனங்கள் யாவை?" என்று கேட்டுக்கொள்ளுங்கள், (பிசாசானவன் இவற்றை அறிந்திருப்பதால் நீங்கள் இவற்றை அறிந்திருத்தல் அவசியமாயுள்ளது.) பின்பு, "எந்த மக்கள், எந்த இடங்கள், எந்த நடவடிக்கைகள், மற்றும் எந்தச் சூழ்நிலைகள் இந்த சோதனைக்கு என்னை நான் விட்டுக்கொடுக்க மிகவும் ஊக்குவிக்கின்றன?" என்று கேட்டுக் கொள்ளுங்கள். அந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் அளித்தவுடன், அந்த மக்கள், இடங்கள், நடவடிக்கைகள், மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்க எல்லா முயற்சியும் மேற்கொள்ளுங்கள். வேறுவிதமாகச் செய்தல் என்பது, "மாம்சத்தின் இச்சைகளுக்கு இடமளித்துப் பேணுதலாக" உள்ளது. K. J. ஃபோர்மேன் என்பவர் 14ம் வசனத்தின் முடிவைப் பின்வருமாறு பொழிப்புரை செய்தார்: "பாவத்திற்குத் திட்டமிடாதீர்கள்; அதை வரவேற்காதீர்கள்; அதற்கு வாய்ப்பளிக்காதீர்கள். உங்கள் வாசல்படியிலேயே பாவத்தை உதைத்து வெளியே துரத்தி விடுங்கள். அப்போது அதை நீங்கள் உங்கள் வீட்டிற்குள் கொண்டிருக்க மாட்டீர்கள்."[42]

அகுஸ்தீன் என்பது சபை வரலாற்றில் நன்கு அறியப்பட்ட பெயர்களில் ஒன்றாக உள்ளது. அவர் எழுதிய *Confessions* என்ற புத்தகத்தில் அவர் தமது மன மாற்றத்தைப் பற்றிக் கூறினார். கி.பி. 386ல், இத்தாலி நாட்டின் மிலான் என்ற நகரில் சொல்லாட்சித்திறனில் மதிப்பிற்குரிய பேராசிரியர் என்ற வகையில், அவர் கிறிஸ்தவராவதற்கு ஏறக்குறைய இணங்க வைக்கப்பட்டிருந்தார். இருப்பினும், அவரால் பாவம் நிறைந்த தமது பழைய வாழ்வை விட்டுப் பிரிந்துவர இயலா திருந்தது. ஒருநாள் அவர் ஒரு நண்பருடைய தோட்டத்தில் இருந்தபோது, விளையாடிக்கொண்டிருந்த குழந்தையொன்று "எடுத்து வாசி. எடுத்து வாசி" என்று கூறுவதைக் கேட்டார். அருகிலிருந்த நீண்ட இருக்கை ஒன்றின்மீது பவுலின் நிருபங்களுடைய பிரதி ஒன்றிருந்தது. அதை எடுத்த அகுஸ்தீன் பார்த்த முதல் வார்த்தைகள் பின்வருமாறு: "களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காம

விகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள் ளுங்கள்" (வசனங்கள் 13, 14).[43] அவர், "அதற்குமேல் நான் வாசிக்கவில்லை, அது எனக்குத் தேவைப்படவுமில்லை; ஏனெனில் அந்த வாக்கியம், - அது ஒரு வெளிச்சத்தி னால், எனது இருதயத்திற்குள் பாய்ச்சப்பட்ட பாதுகாப்பினால் - உடனடியாக முடிந்தது போன்றிருந்தது, சந்தேகத்தின் இருண்ட நிலை மறைந்து ஒழிந்து போயிற்று" என்று எழுதினார்.[44]

பவுலின் வார்த்தைகள் அகுஸ்தீனை மாற்ற உதவின, மற்றும் அவை உங்களை மாற்றவும் உதவக்கூடும். இப்போதிலிருந்து கர்த்தர் [திரும்பவும்] வரும் வரைக்கும், நீங்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழுதல் முக்கியமானதாக உள்ளது.

## முடிவுரை

ரோமர் 13:8-14 வசனப்பகுதியானது சோம்பேறித்தனமான கிறிஸ்தவர்கள் "விழித்தெழும்படிக்கு தேவனுடைய அழைப்பு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தர் வரும் வரைக்கும், நாம் அவரைப் போலிருக்கப் பிரயாசப்பட வேண்டும் என்பது இவ்வசனப்பகுதியைத் தொகுத்துரைக்கும் ஒரு எளிய வழியாக உள்ளது: நாம் அன்புகூரும் மக்களாக இருப்பது அவசியம், மற்றும் நாம் தேவபக்தியுள்ள மக்களாக இருப்பது அவசியம். கர்த்தர் எந்த வேளையிலும் வரக்கூடும் என்பதால், நாம் ஒவ்வொருவரும் நம்மையே, "அவர் வருகைக்கு நான் *ஆயத்த மாக இருக்கிறேனா?*" என்று கேட்டுக்கொள்ள வேண்டும். உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் நீங்கள் ஒரு தேவையைக் கொண்டிருந்தால், அதைப்பற்றி நீங்கள் இன்றே அக்கறை எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் ஜெபிக்கிறேன்.

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்தப் பாடத்தைப் பயன்படுத்தும்போது, இன்னும் கிறிஸ்தவர் ஆகாதவர்களுக்கு, கிறிஸ்தவர் ஆவது எப்படி என்று கூற நீங்கள் விரும்புவீர்கள் (யோவான் 3:16; லூக்கா 13:3; மாற்கு 16:16). மேலும், விசுவாசமில்லாத நிலையிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் ஆவிக்குரிய தேவைகளைப் பற்றி எவ்வாறு அக்கறை எடுத்துக்கொள்ள முடியும் என்றும் விளக்கம் அளியுங்கள் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).

"தேவனுடைய விழிப்பூட்டும் கடிகாரம்" என்பது இந்தப் பாடத்திற்கான மாற்றுத்தலைப்பாக உள்ளது. நிதிநிலை சார்ந்த விஷயங்களில் பொறுப்புள்ள நபராக இருத்தல் பற்றிப் போதிக்க அல்லது பிரசங்கிக்க, 8ம் வசனத்தின் முதல் வார்த்தைகளை நீங்கள், தொடக்க இடமாகப் பயன்படுத்த முடியும்.

---

குறிப்புகள்

[1]எனது NASB வேதாகமப்பிரதியிலுள்ள ஒரு குறிப்பின்படி, இதுவே "மாரநாதா" என்பதன் நேரடியான அர்த்தமாக உள்ளது. [2]கடன் கொடுத்தல் மற்றும் கடன்

*வாங்குதல் பற்றி வேதாகமம் பேசுகிறது. எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 22:25; சங்கீதம் 37:26; மத்தேயு 5:42; லூக்கா 6:35; பிலேமோன் 17, 18 ஆகிய வசனங்களைக் காணவும்.* [3]*7 மற்றும் 8ம் வசனங்களுக்கிடையிலான பிணைப்பு, ஆங்கில வேதாகமத்தைக் காட்டிலும் கிரேக்க வேதாகமத்தில் மிகத் தெளிவாக உள்ளது. 7ம் வசனத்தில் "செலுத்த வேண்டியதோ" என்றும் 8ம் வசனத்தில் "கடன்படுதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடர்கள் ஒரே வேர்வார்த்தையிலிருந்து வந்துள்ளன.* [4]*"ஒன்றிலும் கடன்படாதிருங்கள்" என்பது, தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக் காட்டுகிற நிகழ்கால வினைச்சொல்லில் உள்ளது. இந்தச் சொற்றொடர், "*தொடர்ந்து *கடன் பட்டுக் கொண்டு இராதீர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க முடியும்.* [5]*சில வேளைகளில் இது அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் ஏற்பட்டு விடுகிறது; விஷயம் அதுவாக இருந்தாலும், மனச்சாட்சியுள்ள கிறிஸ்தவர்கள் தங்களுக்குக் கடன் கொடுத்தவர்களிடத்தில் சென்று கடைசியில் தங்கள் கடன்களைச் செலுத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்துகொள்வார்கள்.* [6]*அமெரிக்காவில், கிரெடிட் கார்டுகளைக் கொண்டு இதைச் செய்தல் சுலபமாக உள்ளது. தேவைக்கு கடன் வாங்குதல் மற்றும் பேராசையைத் திருப்திபடுத்த கடன் வாங்குதல் ஆகியவற்றிற்கிடையில் சில எழுத்தாளர்கள் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றனர்.* [7]Adapted from D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 238. [8]*ஓரிகன் என்பவர் "சபை முற்பிதாக்கள்" என்று அழைக்கப்படுபவர்களில் ஒருவராவார்.* [9]Quoted in W. Sanday and A. C. Headlam, *The Epistle to the Romans*, The International Critical Commentary (New York: Charles Scribner's Sons, 1906), 373. [10]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans*, Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 253.

[11]*8ம் வசனத்தில், "உன் அயலான்" என்பதற்குப் பதிலாகக் கிரேக்க வசனத்தில் "மற்றவர்கள்" என்று மாத்திரம் உள்ளது; ஆனால் 9 மற்றும் 10ம் வசனங்கள், "மற்றவர்" என்பது உங்கள் "அயலார்" என்று தெளிவாக்குகின்றன.* [12]*கிரேக்க மொழியிலுள்ள ஒரு சில கையெழுத்துப் பிரதிகளில், "பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" என்பது கூட்டப்பட்டுள்ளது (*KJV *வேதாகமத்தில் காணவும்; தமிழ் வேதாகமத்திலும் இது உள்ளது), ஆனால் பெரும்பான்மையான பழங்காலக் கையெழுத்துப் பிரதிகளில்,* NASB *வேதாகமத்தில் பட்டியலிடப்பட்ட நான்கு கட்டளைகள் மாத்திரமே உள்ளன.* [13]*பத்துக்கட்டளைகள் உட்பட மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் கிறிஸ்தவர்களுக்குள்ள உறவைப் பொறுத்தமட்டில், ரோமருக்கு எழுதிய நிருபம் 3 என்ற புத்தகத்தில் காணப்படும், "கிறிஸ்தவரும் நியாயப்பிரமாணமும் (7:1-4)" என்ற பாடத்தில் 7:1-4ன் மீதான விளக்கங்களை மறுகண்ணோட்டமிடவும்.* [14]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 429. [15]*இவ்விடத்தில் நீங்கள் ரோமருக்கு எழுதிய நிருபம், 4* என்ற புத்தகத்தில் காணப்படும் "அன்புகூரப்பட இயலாதவர்களை அன்புகூருவது எவ்வாறு (12:14, 17-21)" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிட விரும்பலாம். [16]*கிரேக்க வசனமானது "பொல்லாங்கை நடப்பிக்காதீர்கள்" என்று நேரடி அர்த்தம் தருகிறது.* [17]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 349-50. [18]Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 16 October 2005. [19]*"காலம்" என்பது "ஒரு குறிப்பிட்ட அல்லது திட்டவட்ட*

*மான காலகட்டத்தை, ஒரு பருவகாலத்தை குறிக்கிற" kairos என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது* (Vine, 633). *சில மொழிபெயர்ப்புகளில்* "season" *என்றுள்ளது.* [20]*சில பேச்சாளர்கள் இவ்விடத்தில் நகைச்சுவையின் தொடுகை ஒன்றை உட்செருகு கின்றனர்: "பவுல், தமது நிருபம் வாசிக்கப்படுகையில் தூங்கிவிழுந்து கொண்டிருந்த மக்களை எழுப்ப இவ்விடத்தில் முயற்சி செய்யவில்லை. ..." பின்பு அவர்கள், பவுலின் வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்துகின்றன என்று விளக்கம் தருகின்றனர்.*

[21]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 154. [22]*ஏவுதல் பெற்ற, புதிய ஏற்பாட்டுப் பேச்சாளர்கள் இரண்டாம் வருகை* [*immediate*] *உடனடியாக இருந்தது என்றல்ல, ஆனால்* [*imminent*] *அண்மையிலிருந்தது என்று போதித்தனர். அதாவது, அவர்கள் கிறிஸ்து தங்களின் வாழ்நாள் காலத்தில் வருவார் என்றல்ல, ஆனால் அவர் எந்த வேளையிலும் வரக்கூடும் என்றே போதித்தனர்.* [23]*இரவு/பகல் என்ற நேரெதிர் ஒப்பீட்டுக் கருத்தானது வேதவசனங்களில் பலமுறை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, யோவான் 9:4 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5:5 ஆகிய வசனங்களைக் காணவும்.* [24]*இதை உங்கள் சமூகத்திற்குத் தக்க வகையில் தழுவியமைத்துக்கொள்ளுங்கள். நீங்கள், "போர்வைகளை உதறிவிட்டு, உங்கள் வேலை நேர உடைகளை அணிந்துகொள்ளுங்கள்" என்று கூறலாம்.* [25]Vine, 37. *ஹியூகோ மெக்கார்டு என்பவரின் மொழிபெயர்ப்பில்* "armor" *என்பதற்குப் பதிலாக* "weapons" *என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.* [26]*ரோமருக்கு எழுதிய நிருபம், 2 என்ற புத்தகத்தில் "கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை வாழ்வது எவ்வாறு? (6:5-14)" என்ற பாடத்தில் 6:13க்கான விளக்கங்களைக் காணவும்.* [27]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 462. [28]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 178. [29]Vine, 532. [30]Bauer, 440. *எபிரெயர் 13:4ல் koite (மஞ்சம்) என்பது தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணத்தில் பாலுறவைக் குறிக்கிறது.*

[31]Vine, 353. [32]Barclay, 179. [33]John MacArthur, *Romans 9-16*, The MacArthur New Testament Commentary series (Chicago: Moody Press, 1994), 267. [34]Vine, 604. [35]MacArthur, 267. [36]*Zelos என்பது* "zeal" *("வைராக்கியம்") என்பதைக் குறிப்பிட ஒரு நல்ல கருத்திலும் பயன்படுத்தப்படமுடியும் (காண்க ரோமர் 10:2), ஆனால் ரோமர் 13:13ல் இது மோசமான கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு.* [37]Barclay, 179. [38]Briscoe, 241. [39]*"தரித்தல்" என்பது ("அவள் ஒரு நல்லவள் போன்று வேடமிட்டிருக்கிறாள்" என்பதில் உள்ளது போன்று) மோசமான கருத்தில் பயன்படுத்தப்பட முடியும் என்பதால், இயேசுவைப் போலிருக்கப் பிரயாசப்படுதலைப் பற்றியே பவுல் பேசினார் என்பதை வலியுறுத்த நீங்கள் விரும்பலாம்.* [40]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 473, n. 87.

[41]*இந்த மற்றும் இதற்கு அடுத்த பத்திகளை நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருந்து மாறு தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [42]Kenneth J. Foreman, *The Letter of Paul to the Romans,* The Layman's Bible Commentary, vol. 21 (Richmond, Va.: John Knox Press, 1961), 57. [43]*அகுஸ்தீன் இவ்வார்த்தைகளை ஆங்கிலத்தில்/தமிழில் அல்ல, ஆனால் இலத்தீன் மொழியிலேயே வாசித்தார்.* [44]Augustine *Confessions* 8.12.